## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 63 /2025**

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய கனகா **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 02.04.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : கனகா | | |
| Father /Husband Name | : ராஜேந்திரன் | Court | : |
| Village | : மங்கைநல்லூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 33/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | -- | வாதி சுலோச்சனா என்பவரின் வாரிசு சான்று கோரி விண்ணப்பித்த விண்ணப்பத்தின் அசல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 10.10.2023 | சுலோச்சனாவின் இறப்பு சான்றிதழின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 21.03.2024 | பாஸ்கரன் என்பவரின் இறப்பு சான்றிதழின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **வாசாஆ 3**ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | -- | சுலோச்சனா என்பவரின் குடும்ப அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5. | 29.04.2010 | சுலோச்சனா பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 6. | 05.09.2019 | முகமது பாருக் என்பவரும் சுலோச்சனா என்பவரும் ஏற்படுத்திக்கொண்ட கிரய உடன்படிக்கையின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.